6.9..2019
அசல் வழக்கு எண்: 245-2014

வா.சா.1 பாலசுப்பிரமணி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதிகளின் முகவரி சரியானதா என்றால் சரிதான் மேற்படி முகவரியில் தான் பிரதிவாதிகள் அனுப்பிய அறிவிப்பு வந்தது ன்றால் சரிதான் அதனை நான் வாங்க மறுத்துவிட்டேன் ன்றால் சரிதான். சர்வே எண் விஸ்தீரணம் எதுவும் தெரியாது கோயில் சொத்துக்காக வழக்கு. சொத்து விபரத்தில் கோயிலுக்குரிய சொத்தைதான் வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன். பிராதில் வழக்கு சொத்து பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சசிகுமாரும், ராமநாதன் பூட்டை உடைத்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். டிரஸ்டு ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேன். டிரஸ்டு: ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் எல்லாம் சரியானதா என்றால் சரிதான். டிரஸ்டு ஆவணம் தாயாரிப்பு சம்பந்தமாகவும் டிரஸ்டியாக எங்களையும் சேர்ப்பது சம்ப்நதமாக பிரதிவாதிகள் என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. பசுபதியம்மாளுக்கு வாரிசு இல்லை என்றும் லட்சுமியம்மாளின் வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் வாரிசுகள் வெவ்வேறு ஊருகளில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தாத்தா சுப்பாரெடடி 1936ம் வருடம் கோவிலுக்காக செட்டில் மெண்டு ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். 1936ம் வருட தான செட்டில்மெண்டு பத்திரம் என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1936 வருட தான செட்டில்மெண்டு பத்திரத்தை நான் படித்து தெரிந்து கொண்டேன். சுப்பாரெட்டி எழுதிகொடுத்த செட்டில்மெண்டு பத்திரத்தில் மனைவி அனுபவித்து வந்து பின் வாரிசுகள் அனுபவிக்க வேண்டுமென்று எழுதியுள்ளார். வர்.சா.ஆ.1 ஆவணத்தில் விநாயகர் கோயிலை ஸ்தாபிப்பதற்கு ஆவணமாக உள்ளதாகவும் விநாயகா கோவிலை ஸ்தாபித்தால் வாரிசு, சந்ததிகள் திரேக ஆரோக்கியமும் இருக்க வேண்டுமென சரத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நோக்கத்திற்காக தான் என் தாத்தா சுபபாரெட்டி செட்டில்மெண்டு ஆவணம் வா.சா,ஆ.1 எழுதியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா,ஆ.1 ஆவணத்தில் நான் நடத்தி வந்து என் ஆயுக்கு பின் மனைவி சொக்கம்மாள் நடத்தி வரவேண்டுமென்று சரத்து காட்டப்பட்டுள்ளது சொக்கம்மாள் நடத்தி வந்தாரா என்றல் பின் நான் அதுபற்றி தெரிந்துகொண்டேன். சொக்கம்மாளுக்கு 3 பெண் மக்கள் என்றால் சரிதான். பசுபதியம்மாள் லிங்கம்மாள், லட்சுமியம்மாள். சொக்கம்மாள் இறப்பிறகு பிறகு பசுபதியம்மாள் விநாயகர் கோவிலை

பராமரித்துவந்தார் என்றால் சரிதான். பசுபதியம்மாளுக்கு வாரிசு இல்லாததால் லிங்கம்மாள் வாரிசுகள் தான் கோயிலை நிர்வகித்து வந்தார்கள் என்றால் சரிதான். லட்சுமியம்மாளின் வாரிசுகள் வெவ்வேறு ஊர்களில் வசித்து வருவதால் விநாயகர்கோயிலுக்கான தினசரி பூஜைகளை செய்யவில்லை என்றால் சரியல்ல நான் செய்து வருகிறேன். வா.சா,ஆ.1 ஆவணத்தின் படி லிங்கம்மாளின் வாரிசுகள் தான் விநாயகர் கோயிலுக்கான தினசரி பூஜைகளை நடத்தி வருகிறார்கள் என்றால் நாங்கள் தான் நடத்தி வந்தோம் ரொம்ப நாளாக அவாகள் வெளியூரில் இருந்ததால் நடத்தவிலலை பின் நடத்தி வருகிறார்கள் 1ம் பிரதிவதி பேய்குளத்தில் வசித்து வருகிறார் ஏ்ன்றால் சரி தான் தாவா வழக்கிற்காக நான் விநாயகர்கோவிலை பூஜை செய்வதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சித்திவிநாயகர் கோயிலுக்கான பூஜைகளை நானோ லட்சுமியம்மாள் வாரிசுகளோ செய்யவில்லை என்றால் சரியல்ல. சுப்பாரெட்டி ஏற்படுத்திய செட்டில்மெண்டு ஆவணத்திற்கு விரோததமாக நோக்கங்களை சிதைக்கும் வகையில் எங்கள் நோக்கம் உள்ளது என்றால் சரியல்ல. சித்திநாயாகர்கோயில் சும்பந்மாக 1936, 1940, 1947ல் செட்டில்மெண்டு ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 3 ஆவணங்களின் நோக்கம் சித்திவிநாயகர் ் கோவிலை பராமரித்து நிர்வாகம் செய்துவருவது தான் என்றால் சரிதான். 3.9.1913 தேதியிட்ட டிரஸ்டு ஆவணம் 1936, 1940, 1947 வருட செட்டில்மெண்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு ஓரளவுக்குத் தெரியும். வா.சா,ஆ2 ஆவணம் பசுபதியம்மாள் தத்து எடுத்தற்காக சுவீகாரபத்திரம் பசுபதியம்மாள் கணவர் பெயர் ராமசாமி. வா.சா,அ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் ராமசாமி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வா.சா,ஆ2 ஆவணத்தில் பசுபதியம்மாள் கணவர் ராமசாமி தரப்பினராக இல்லை என்றால் சரிதான். சுப்பாரெட்டிக்கு வயது தற்போது 68 இருக்கும். சுப்பாரெட்டி வயது 50 என பிராதில் குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் அதுபற்றி எனக்குத் தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் எதற்காக எழுதப்பட்டது என்றால் கோயில் சொத்து வெளியில் போய் விடக்கூடாது என்பதால் எழுதப்பட்டது .வா.சா,ஆ.2 அவணம் எழுதப்பட்ட காலத்தில் சுப்பாரெட்டிக்கு வயது 30 இருக்குமா என்றால் 30 வயதுக்கு மேல் இருக்கும். சுப்பாரெட்டி தகப்பனார் பெயர் கோபால கிருஷ்ணரெட்டியார். சுப்பாரெட்டி அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். சுவீகாரம் எடுக்கப்பட்ட கால்தில் சுப்பாரெட்டி வேலையில் இருந்து வந்தார் என்றால அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா,ஆ2 ஆவணம் நடைமுறைக்கு வந்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன் தற்போது சுப்பாரெட்டி விருதுநகரில்

உள்ளார். வேலை பார்த்த காலத்திலும் விருதுநகரில் தான் இருந்தார். சுப்பாரெட்டியின் தந்தை ராமசாமி என்பதற்கு எந்தவித ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால அதுபற்றி எனக்குத் தெரியாது. சுப்பாரெட்டி தகப்பனார் கோபாலகிருஷ்ணன் தற்போது உயிருடன் இல்லை இறந்துவிட்டார். கோபாலகிருஷணனின் ஈமைகிரிகைகளை சுப்பாரெட்டி செய்தார் என்றால் சரிதான். பசுபதியம்மாள் கோபாலகிருஷணன் இறந்த பின் இறந்தார். பசுபதியம்மாளின் கடைசி காலத்தில் அவரை லிங்கம்மாளின் வாரிசுதாரர்கள் பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பசுபதியம்மாள் இறப்பிற்கு ராதாகிருஷணன், பாலகிருஷெண்ன் ஆகியோர் அடக்கம் சம்பந்தமான வேலைகளை செய்தோம் என்றால் சரிதான். வா.சா,ஆ.2 ஆவணம் சட்டபடி நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. சுப்பாரெட்டி அரசு ஊழியர் என்பதால் அவரது தகப்பனாரான கோபாலகிருஷ்ன ரெட்டியார் தந்தையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பசுபதியம்மாளுக்கு வாரிசாக எந்த தஸ்தாவேசும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சித்திவிநாயகா் கோயிலை வா.சா,ஆ1 ஆவணம் மூலம் பசுபதியம்மாள் பராமரித்து வந்துமு அவரது இறப்பிற்கு பின்லிங்கம்மாள் வாரிசுகள் தற்போதுவரை பராமரித்துவருகிறார்கள் ஏனறால் சரியல்ல. பசுபதியம்மாள் உடல்நிலை சரியில்லாத நிலையில் லிங்கம்மாளின் வாரிசுகள் சித்திவிநாயகர்கோயிலையும் பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் வாரிசுகளோ நானோ சித்திவிநாயகர் கோயிலுக்கான பூஜைகளை எந்தகாலத்திலும் செய்யவில்லை என்ால் சரியல்ல. பிரதிவாதிகள் சித்திவிநாயகர் கோவிலை வா.சா,ஆ.1 ஆவணத்தின்படி தொடர்ந்து கோயிலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் எங்களிடம் கேட்டார்கள் என்ால் இல்லை. பிரதிவாதிகள் கோயில் நிர்வாகத்தை தொடர்ந்து நடத்துவதற்கு டிரஸ்டு ஆவணம் ஏற்படுத்த அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் அதனை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சித்திவிநாயகர் கோயிலுக்காக டிரஸ்டியாக சேர்வதற்கு எனக்கு விருப்பம் இல்லை டிரஸ்டே தேவையில்லை. லட்சுமியம்மாள் வாரிசுகளுக்கும் டிரஸ்டே தேவையில்லை என நினைக்கிறோம். நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் .இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் ராமநாதன், சீனவாசனுக்கு இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஆகும். வா.சா,ஆ.9 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றே எனக்குத் தெரியாது. வா.சா,ஆ.9 ஆவணம் கோயில் சொத்துக்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

(மேலும் குறுக்கு விசாகரணை செய்ய வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)..